| Judicial Form No.53<br>(Sec.Rule 42)<br>DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII Code of Criminal Procedure<br>**In the Court of the Judicial Magistrate No.II, Poonamallee** | | |
|---|---|---|
| **சி.சி.எண். 434/2023** | | |
| Deposition of witness for | Prosecution | அ.சா.1 |
| | Defence | |
| | Court | |

| | | |
|---|---|---|
| Name | : | விஜய் |
| S/O | : | ரமேஷ் |
| Village | : | நெ. 46, கட்டப்பொம்மன் தெரு, நந்தவன மோட்டூர், காமராஜ் நகர், ஆவடி,சென்னை |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 25 |

| | |
|---|---|
| Solemnly aaffirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (CentralAct 44 of 1969) on the day of | **09.05.2024** |

**முதல் விசாரணை**

1. 19./06.2022 ம் தேதி குடும்பத்தினருடன் இருந்த போது, 12.30 மணியளவில் ஒரு போன் வந்தது, என் அண்ணன் பவித்திரன் நண்பர் முகேஷ் என்பவர் போன் செய்து, என் அண்ணனுக்கு சுதர்ஷனம் பள்ளியிடம் விபத்து ஏற்பட்டுவிட்டதாக, தகவல் சொன்னார்.

2. அங்கு போய் பார்த்தபோது, என் அண்ணன் யமகா எப்ஜெட் டிஎன்.12 ஒய் 4495 என்ற வண்டி இருந்தது.

3. என் அண்ணனை பூந்தமல்லி மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சொன்னார்கள். அந்த இடத்தில் சிப்ட் கார் ஒன்று இருந்தது. அந்த காரின் பதிவு எண். சிஎச் 01 ஏஆர் 8380.

4. பூந்தமல்லி மருத்துவமனைக்குபோன போது, என் அண்ணனுக்கு தலையில் அடிப்பட்டிருந்தது. அவரை கே.எம்.சி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அழைத்து போக சொன்னாரகள். கே.எமெ்.சி மருத்துவமனைக்கு கொண்டு சென்று, சேர்த்தோம்.

5. சிகிச்சை பலனில்லாமல், ஜீன் மாதம் 23 ம் தேதி என் அண்ணன் பவித்திரன் இறந்துவிட்டார்.

6. சம்பவம்குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

7. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள என்னுடையது தான். இது நான் கொடுத்த புகார் தான். இந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. போலீசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. தகவல் வந்தவுடன் விபத்து நடந்தஇடத்தை நான் போய் பார்த்தேன். நான் போய் பார்த்ததாக பொய் சொல்கிறேன் என்றாலும், என் அண்ணணின் வண்டி பதிவு எண் எனக்கு தெரியாது என்றாலும்சரியல்ல.

2. நான் வண்டியை அந்த இடத்தில் போய் பார்த்திருந்தால், வாகனத்தின் பதிவு எண் சரியாக சொல்லியிருப்போன் என்றாலும்சரியல்ல.

3. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.